முருகப்பெருமான் துணை

**மகான் குஜன்பகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.09.2022**, திங்கட்கிழமை

1. தானதரும சக்திதனை பெருக்கி
   தவராஜனாக வாழும் அரங்கனே
   ஞானமுடன் உன் பெருமை கூறி
   ஞாலமதில் அருளாசி தன்னை
2. தன்னையே சுபகிருது யாளி திங்கள்
   தக்கதொரு இருபானேழ்திகதி சோமவாரம்
   **(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 27 நாள், 12.09.2022 திங்கட்கிழமை)**
   நன்னயமாய் குஜன்பகவான் யானும்
   நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
3. நலம்தரும் அரங்க மகானின்
   ஞான உபதேசங்கள் தன்னை
   பலம்தரும் சக்தியாக உலகோர் ஏற்று
   பாருலகம் எங்கும் பின்பற்றி வருதலுற
4. வருகவே ஆறுமுகனார் வழிபாட்டை
   வணங்கி மக்களெல்லாம் செய்துவர
   தர்ம சிந்தைகள் பெருகும்படி
   தவராஜனின் அன்னதான கொள்கையை
5. கொள்கையை உலகமெல்லாம் அறிய
   கிராமம் முதல் நகரங்கள் எல்லாம் தர்மமதை
   வல்லமைபட உலகோர் செய்துவர
   வளரும் தர்மபூமியாக இந்த பேருலகம்
6. உலகினில் அரங்க மகான் அவதாரம்
   உயர்படைப்பாக பறைசாற்றப்படவே
   கலகம் மாச்சர்யம் ஏதுமில்லா
   கண்ணிய பூமியாக இந்த உலகம் மாறும்
7. மாறுதலை செய்ய வந்தநல்
   மாதவசியின் அற்புதம் உலகோர் அறிய
   ஆறுதலாய் உலகமெங்கிலும் ஞானப்படைகள்
   அளவிலா பெருகி இனிதே தேற்றம்
8. தேற்றம்தான் அரங்கன் சக்தியால் நடக்கும்
   தேசிகன் வழி தேர்வு கண்டவர் எல்லாம்
   ஆற்றல்பட உலகை மாற்றுகின்ற
   ஆறுமுகனாரின் ஞானிகளாக மாறுவர்
9. மாறவே ஞானலோக மாற்றமாக
   மண்ணுலகில் அரங்கனின் மகிமைகள்
   ஆறுதல்பட அறமாக மக்களுக்கு வரமாக
   அடைதல் கண்டு சிறப்பு காணக் கூடும்

10. கூடவே கலியினில் எல்லா தேசங்களிலும்
குருவருள் கொண்ட தொண்டர்களாகவும்
சுடரேற்றி வரும் ஞானவான்களாகவும்
சுத்தநெறி தடைபடா கடைபிடித்து நன்கு

11. நன்றாக அரங்கன் வேண்டலின்படி
ஞான ஆட்சியை இந்த உலகம் அடையும்
இன்றுமுதல் உலகோர் அரங்கன் சபைக்குவர
எல்லா மாற்றமும் கண்டு இனிதே அற்புதம் நிகழும்
அருளாசி முற்றே

–சுபம்–